13.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.107/2018</u>

அ.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | | |
| த/பெ | ஏழுமலை | | |
| **கிராமம்** | கண்டம்பாக்கம் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | **62/2024** |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கில் இறந்த நபர் எனது 3ம் தம்பி ஆவார். தம்பி பெயர் முருகன் ஆகும். வீரம்மா என் தம்பி முருகனின் மனைவி ஆவார். வீரம்மா தற்போது உயிருடன் இல்லை. அவர் இறந்து விட்டார். என் தம்பி தற்போது உயிருடன் இல்லை. அவர் இறந்து விட்டார். என் தம்பி முருகன் இறந்து விட்டார். என் தம்பி விநாயகர்சதுர்த்தி அன்று சம்மன் கொடுத்தவுடன் இறந்து விட்டார். என் தம்பி வெட்டு பட்டு தான் வீட்டிற்கு வந்தார். அவரை யார் வெட்டினார்கள் என்ன என்று எனக்கு தெரியாது. நான் கூற இயலாது. வழக்கு சம்மந்தமாக இறந்து போன முருகனின் மனைவி வீரம்மா தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அவரும் அதன் பிறகு 4 வருடங்கள் கழித்து மனஉளைச்சலின் காரணமாக இறந்து விட்டார். என் தம்பி வீட்டு வாசலிலேயே வெட்டு பட்டு அங்கேயே கிடந்தார். சம்மன் கொடுத்து 10 மணி நேரம் கூட ஆகவில்லை. அவர் இறந்து விட்டார். அதன் பிறகு ஊர் காரர்கள் தகவல் கொடுத்து நான் அவர் வீட்டிற்கு சென்றேன். அங்கு என் தம்பி வெட்டு பட்டு காயங்களுடன் இறந்து கிடந்தார். அவரை என் மற்றொரு தம்பி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் தம்பி ஆறுமுகம் வழக்கறிஞருக்கும் 1ம் எதிரி ராதாகிருஷ்ணனுக்கும் முன்விரோதம் இருந்ததாகவும், அந்த முன்விரோதம் 1ம் எதிரி ராதாகிருஷ்ணன் கள்ளசாராய தொழில் செய்து வந்ததை தம்பி ஆறுமுகம் தட்டி கேட்டு வந்ததால் முன் விரோதம் ஆகி கடந்த 19.06.2006ம் தேதி மாலை ஜானகிபுரம் கன்னியம்மன் கோவில் அருகே மடக்கி வெட்டி கொலை செய்தார்கள் என்றும், அந்த கொலையை நேரில் பார்த்த முக்கிய சாட்சி இந்த வழக்கில் இறந்துபோன முருகன் என்பவர் ஆவார் என்றும், ஆறுமுகம் கொலை வழக்கில் கடந்த 08.09.2014ம் தேதி திண்டிவனம் நீதிமன்றத்தில் விசாரணைக்காக இருந்தபோது மேற்படி நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது என்றும், ஆறுமுகம் கொலை வழக்கில் முருகன் சாட்சி சொல்ல கூடாது என்று 1ம் எதிரி ராதாகிருஷ்ணனை நேராகவும், எங்கள் ஊரை சேர்ந்த ஞானவேல், காலனியை சேர்ந்த கலியவரதன், திருப்பாச்சனூர் கிராமத்தை சேர்ந்த ஞானவேல் ஆகியோர்கள் மூலம் பஞ்சாயத்து பேசினார்கள் என்றும், அதற்கு முருகன் ஒத்துக்கொள்ளவில்லை என்றும், அதனால் ராதாகிருஷ்ணன் முருகனிடம் சாட்சி சொல்ல விடமாட்டோம் என்றும், 1ம் எதிரியின் கூட்டாளிகளும் சேர்ந்து ஊரில் சுற்றி வந்தார்கள் என்றும், இந்த நிலையில் 29.08.2014ம் தேதி அதிகாலையில் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச நான் வீட்டில் இருந்து புறப்பட்டு சென்று கொண்டிருந்தேன் என்றும், அதிகாலை 3.30 மணியளவில் 1ம் எதிரி ராதாகிருஷ்ணன், வீரபத்திரன், ரகு, சத்தியசீலன், பிரதாப், குப்பன், அன்பரசன், புகழேந்தி, தண்டபாணி, ஆரோக்கியராஜ், சிலம்பரசன், சிவகுமார், விநாயகமூர்த்தி ஆகியோர்கள் கையில் கொடுவாள் கத்தி மற்றும் தடி போன்ற ஆயுதங்களுடன் என் எதிரில் வந்தார்கள் என்றும், அவர்கள் வருவதை பார்த்து நான் மறைந்து நின்று கவனித்தேன் என்றும், அவர்கள் அனைவரும் என் தம்பி முருகன் வீட்டு பக்கம் போவதை பார்த்தேன் என்றும், அந்த பகுதியில் உள்ள

சில வீடுகளில் எரிந்து கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன் என்றும், எதிரிகள் என்னை கவனிக்கவில்லை என்றும், எதிரிகள் அனைவரும் என் தம்பி வீட்டிற்கு போனார்கள் என்றும், என் தம்பி வீட்டின் முன் பகுதியில் குண்டு பல்பு எரிந்து கொண்டிருந்தது என்றும், அப்போது என் தம்பி வீட்டின் வெளியில் இருந்த திண்ணையில் இடது கையை தலைக்கு வைத்து படுத்து தூங்கி கொண்டிருந்தார் என்றும், அந்த சமயத்தில் வெளியே வந்த என் தம்பி முருகன் மனைவி வீரம்மா எதிரிகளை பார்த்து அய்யோ அட பாவிகளா எங்கே வந்தீர்கள் என்று கேட்டார் என்றும், 1ம் எதிரி உன் புருசன் எங்களுக்கு எதிராக சாட்சி சொல்ல போறான் நாங்கள் சும்மா விடுவோமா என்று சொல்லி உயிரோடு இருந்தால்தானே சாட்சி சொல்வான் என்று 1ம் எதிரி கத்தினார் என்றும், அப்போது நான் எதிரிகளுக்கு பயந்து கொண்டு கிட்ட போகாமல் என் தம்பி முருகனின் கூரை வீட்டிற்கு பக்கத்தில் மறைந்து இருந்து சம்பவத்தை பார்த்தேன் என்றும், என்னை போலவே சத்தம் கேட்டு முத்தையன் மகன் முருகன், மடத்தி கவுண்டர் மகன் ஜெயச்சந்திரன், ராஜேந்திரன் மனைவி ஜெயக்கொடி ஆகியோர்கள் மறைந்திருந்து பார்த்தார்கள் என்றும், முருகனை எழுந்திருக்க விடாமல் முருகனின் தலையை சத்தியசீலன், புகழேந்தி இருவரும் கால்களை கோபாலகிருஷ்ணன் பிடித்து கொண்டும் அவர் மீது ஏறி உட்கார்ந்து கொண்டும், பிரதாப், சிலம்பரசன், அசோக்குமார், சிவகுமார், விநாயகமூர்த்தி ஆகியோர் கத்தி , தடிகளை வைத்துக்கொண்டு முருகனை சுற்றி நின்று கொண்டிருந்தார்கள் என்றும், 1ம் எதிரி அவனை வெட்டுங்கடா என்று கத்தினார் என்றும், 1ம் எதிரி ராதாகிருஷ்ணன், வீரபத்திரன், ரகு ஆகிய மூவரும் அசிங்கமாக தேவிடியா பசங்களா என்று திட்டி என் கண் முன்னாலேயே ஒழிந்து போடா என்று சொல்லி கொடுவா கத்தியால் முருகனின் கழுத்து பகுதியில் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், முருகனின் மனைவி வீரம்மாள் சத்தம் போட்டதில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எழுந்து ஓடி வரவே எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து ஓடி விட்டார்கள் என்றும், இந்த சம்பவம் குறித்து முருகனின் மனைவி வீரம்மாள் தான் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், இது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தபோது மேற்சொன்ன விவரங்களை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை

சேர்ந்தவர்கள் என்பதாலும், தற்போது சற்று மனஉளைச்சலில் இருப்பதாலும், உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை**

**இல்லை**